திரு. ஆ. கு. சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்கள் எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ? அவர்களில் அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எட்டுப் பேர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்று என்னிடம் விவரம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்களுக்குரிய சர்விஸ் கண்டிஷன்கள் பற்றி ரூல்ஸ் விதிக்கப்படவில்லை என்று முதல் அமைச் சரவர்கள் சில மாதங்களுக்கு முன்பு இந்த அவையில் கூறினார்கள். அந்த விதி முறைகள் இப்போதாகிலும் விதிக்கப்பட்டிருக்கின்றனவா ? இந்த பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்ஸ் சாதாரணமாக திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளில் கட்சி வேலை செய்வதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுக்கான விதி முறைகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள் நடக்கிற இடங்களில் வேலை செய்வதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அன்றொரு நாள் இப்படிப்பட்ட ஐயம் எழுந்தபொழுது இங்கே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் பொது வாக அரசாங்கத்தினுடைய பணிகளை விளம்பரப்படுத்துகிற தொண்டினைச் செய்து வருகிறார்கள். அதை முன்னேற்றக் கழக மாநாடு நடை பெற்றாலும், வேறு எந்தக் கட்சி மாநாடு நடைபெற்றாலும் அல்லது திருவிழாக்கள் நடைபெறுகிற நேரங்களிலும் அதிகமாகக் கூட்டம் வருகிற இடங்களில் எல்லாம் அரசாங்கத்தின் சாதனைகளை விளம்பரப்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். காங்கிரஸ் மாநாடு நடத்தி அதிலே விளம்பரப்படுத்த வேண்டும் என்று கேட்டால் அங்கேயும் வந்து விளம்பரப்படுத்தத் தயாராக இருக்கிறார்கள்.

### *Distillery for Nilgiris*

* 237 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to start a potato based distillery at the Nilgiris ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) : நீலகிரி டிஸ்டில்லரிஸ் லிமிடெட் என்னும் தனியார் நிறுவனத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு மற்றும் அம் மாவட்டத் தில் , கிடைக்கும் பழங்களிலிருந்து சாராயத்தையும், பிற மது

1972 ஆகஸ்டு 22]

வகைகளையும் தயாரிக்க வடிசாலை ஒன்றை கோத்தகிரியில் அமைக்க, அண்மையில் அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. உரிமம் வழங்கு வதற்கு முன், வடிசாலை அமைப்பது, அதன் உற்பத்தித்திறன் ஆகிய விவரங்களை ஆயத்துறை ஆணையாளர் அந்நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. என். கே. பழனிசாமி: இப்பொழுது சர்க்கார் அனுமதியுடன் விற்கக்கூடிய சாராயத்தின் தரம் மிகவும் மோசமாக இருப்பதன் காரண மாக, உருளைக்கிழங்கு, முந்திரிப் பழம் போன்றவற்றிலிருந்து சாராயம் இறக்கி, அதன் மூலமாகத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு உத்தரவு இடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உறுப்பினருடைய கவலையைப் போக்குகின்ற வகையில்தான் உருளைக்கிழங்கிலிருந்தும் மற்றும் வேறு சில பொருள்களிலிருந்தும் இந்தச் சாராயம் இறக்குகின்ற தொழிலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்கும் வகையில் கோத்த கிரியில் அதற்கு அனுமதி அளித்திருக்கிறது.

### வானொலி மூலம் உரையாற்றல்

*238 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாதம் ஒரு முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வானொலி மூலம் உரை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விடுதலை நாள் விழா போன்ற நேரங்களிலும், நெருக்கடி நிலைமை போன்ற நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த நேரங்களிலும் முதலமைச்சர் வானொலி மூலம் மக்களுக்கு உரையாற்றுவது வழக்கம். ஆனால் மாதம் ஒரு முறை முதலமைச்சர் வானொலி மூலம் மக்களுக்கு உரை வழங்கும் செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: "மாநிலச் செய்தி" என்ற தலைப்பில் ஒலிபரப்பும் செய்திகளில்கூட நமது மாநிலத்தைப் பற்றிய செய்திகள் அதிகமாக ஒலிபரப்பப்படுவது இல்லை. எனவே, நமது அரசாங்கம் செய்கின்ற நல்ல திட்டங்களையும் உருவாக்குகின்ற நல்ல சட்டங்களையும் பொதுமக்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூற நமது முதலமைச்சரவர் களுக்கு அத்தகைய வாய்ப்பினை உருவாக்கிக்கொள்வதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒவ்வொரு துறையின் சார்பிலும் செய்யப்படுகிற சாதனைகளை எடுத்துச் சொல்லுகிற வகையில் அந்தந்தத் துறைகளினுடைய தலைவர்கள் அடிக்கடி வானொலியினுடைய அழைப்பின்